1980 பிப்ரவரி 5]

கோவை மத்திய சிறைச்சாலை.

*வினா எண் 47— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: திரு. கு. ரமணி: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கோவை நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள மத்திய சிறையை, வேறு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதா ?

(ஆ] ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : (அ) கோவை நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள மத்திய சிறையை வேறு இடத் திற்கு மாற்றுகிற உத்தேசம் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவை நகரத்தின் மத்தியிலே உள்ள அந்தச் சிறை அந்த நகரத்தின் மத்தியில் இருந்தால் இடைஞ்சலாக இருக்கிறது என்பதால் அதை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டு மென்று கேட்கிற போது அப்படி உத்தேசமில்லை என்று சொல்கிறார்கள். மறுபடியும் அதைப்பற்றி புனராலோசனை செய்ய அரசு முன்வருமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அந்தச் சிறையை மாற்ற வேண்டுமென் றால் அதற்காக 400 ஏக்கர் இடம் தேவை. அது மட்டுமல்ல, அதை மாற்றுவதற்கு நிறைய நிதி தேவைப்படுகிறது. சென் னையிலே உள்ள சிறைச்சாலையை புழல் கிராமத்திற்கு மாற்று வதற்காக 11 கோடி ரூபாய் செலவாகும் என்று உத்தேசிக்கப் பட்டு அது பரிசீலனையில் இருக்கிற காரணத்தினால் கோவை சிறையை வேறு இடத்திற்கு மாற்றினால் அதிகமான செலவு ஏற்படும் என்பதால் இப்போது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சருடைய பேரவைச் செயலர் அதை மாற்றுவதற்கு யோசனை இல்லை என்று சொன்னார். ஆனால் நடைமுறையில் அந்தச்சிறையை அங்கே வைத்திருக்க முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. அதைச் சுற்றிலும் இருக்கிற மதில் உடைக்கப்பட்டு விட்டது. அங்கே இருக்கிற காலியிடங்களில் ஏராளமான கட்டடங்கள் அரசின் சார்பிலே கட்டப்படுகின்றன. நகரத்தின் இருதயம்

போன்ற அந்த இடத்தில இருக்கின்ற அந்தச் சிறையை மருத மலைக்கோ அல்லது வேறு இடத்திற்கோ மாற்றுவது நல்ல தல்லவா ? அதை அரசு செய்ய முன்வருமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, அந்த ச் சிறைக்குத் தேவையான இடம் போக மீதமுள்ள இடத்தைத்தான் சிறைத்துறையே முன் வந்து மற்ற துறைகளுக்கு அளித்திருக்கிறது. அங்கே இருக்கின்ற அந்தச் சிறையே ஒரு இருதயம் போன்றதுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : தலைவர் அவர்களே, கோவை மத்திய சிறையை மாற்றி வேறு இடத்தில் வைப்பதற்காக என்னுடைய தொகுதியிலே பாரஸ்ட் இலாகாவைச் சேர்ந்த இடங்கள் நிறைய இருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் இருக்கிறது. அந்தச் சிறைத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அங்கே வந்து பார்த்து ஆய்வு நடத்திச் சென்றார்கள், அங்கே மாற்றப் போவதாகத் தகவல் கிடைத்தது. 400 ஏக்கர் அல்ல, 500 ஏக்கர் பூமி கூட அங்கே அதற்காக இருக்கிறது, ஆகவே அதை மறுபரிசீலனை செய்ய அரசு முன் வருமா ?

திரு. எம்.ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, சென்னை சிறையை மாற்றுகிற திட்டம் நிறைவேறிய பிறகு அதை அரசு கவனத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. சிகாமணி : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர் பதிலளிக்கும் போது சென்னை சிறையை புழல் கிராமத்திற்கு மாற்றப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்களிடமிருந்து அது குறித்து மறுப்புகள் வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் எந்தக் கேள்வி மூலக் கேள்வியோ அது சம்பந்தமாகத் துணைக் கேள்வி கேட்க வேண்டும்,

திரு. கு. ரமண் : தலைவர் அவர்களே, அமைச்சரின் பேரவைச் செயலர் முதலிலே சொல்லும் போது அந்தச் சிறையை மாற்றுவதற்கு எந்தவிதமான ஆலோசனையும் இல்லை என்று சொன்னார். அதற்குப் பிறகு திரு. சின்னச்சாமி கேள்வியில், அவருடைய தொகுதிக்கு அதை மாற்றுவதற்காக அதிகாரிகள் வந்து பார்த்தார்கள் என்று சொன்னார். எனவே முதலிலே அமைச்சரின் பேரவைச் செயலர் சொன்ன தகவல் சரியா ? அல்லது திரு. சின்னச்சாமி அவர்கள் சொன்ன தகவல் மறைக்கப் படுகிறதா, எந்தத் தகவல சரியானது என்பதை விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

1980 பிப்ரவரி 5]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே. அதிகாரிகள் வந்து பார்த்தார்கள் என்று சொல்லப்படுகிற குறிப்பு என்னிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சி மொழி (சட்டமியற்றல்) ஆணையம்

*வினா எண். 48— திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆங்கிலத்திலுள்ள சட்டங்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்கு அமைக்கப்பட்ட மகராஜன் குழு தனது பணியை எந்த அளவிற்கு முடித்திருக்கிறது ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, இதுவரையிலும் மொத்தம் 146 சட்டங்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, நீதி மன்றத்திலே தமிழிலே தீர்ப்பு வழங்க வேண்டுமென்றால் விரைவிலே அந்தச் சட்டங்கள் எல்லாம் தமிழிலே மொழி பெயர்க்கப்பட வேண்டும். அவசர நிலைப் பிரகடனத்தின் போது கால நிர்ணயம் செய்தது போல, அந்தக் குழுவிற்கும் கால நிர்ணயம் செய்து விரைவில் அந்தப் பணிகளை முடிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? இப்போது இருக்கின்ற ''மகராஜன்'' குழுவே விரைவிலே எல்லாச் சட்டங்களையும் மொழி பெயர்த்துவிட முடியாது, ஆகவே அதற்கு ஒரு சப் கமிட்டி போட்டு அந்தப் பணியை விரைவிலே முடிக்க அரசு ஆவன செய்யுமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, எவ்வளவு விரைவில் செய்ய முடியுமோ அவ்வளவு விரைவில் தான் தற்போது அந்த மகராஜன் குழு செயல்பட்டு வருகிறது. ஆனால் மொழி பெயர்க்கப்பட வேண்டிய பக்கங்கள் 25 ஆயிரம் இருக்கின்றன இதுவரையில 5895 பக்கங்கள் தான் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 19,105 பக்கங்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். அப்படியென்றால் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாவது ஆகும் என்று உத்தேசிக்கப்படுகிறது. அதே நேரத்திலே நிதி நிலைமை அதற்கு ஒத்து வராத காரணத்தால் முழுமையாக வெகு விரைவில் முடிக்கப்படாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.